www.padippakam.com

மலர் - 75
பெப்ரவரி - மார்ச் - 2010
இலங்கையில் செய்தித்தாளக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# செந்தாரகை

சோசலிச ஐக்கிய இலங்கைக்காக சிங்கள, தமிழ் மொழிமூலம் வெளிவரும் செய்தித்தாள்

## சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு வீதியில் இறங்குவார்கள்

**இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சனநாயகத்தின் நிலைத்திருத்தல் பற்றிய கலந்துரையாடல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தல் காலத்தில் இராணுவச் சூழ்ச்சியொன்று பற்றி அரசாங்கமும் அதேபோன்று எதிர்க்கட்சியும் ஒன்றையொன்று குற்றம்சாட்டின. இப்போது சனாதிபதித் தேர்தல் முடிவடைந்துள்ளது.**

அரசாங்கம் எதிர்த்தரப்பினருக்கு எதிராக ஆயுதம் ஏந்தியுள்ளது. லங்கா பத்திரிகையின் ஆசிரியரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதோடு, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணமற்போய் இன்றைக்கு சில வாரங்கள் கடந்துள்ளன. இதன் உச்சகட்டம் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு தற்போது இரகசியமாக தடுத்து வைக்கப் பட்டுள்ளமையாகும். இராணுவச் சூழ்ச்சியொன்றுக்காக சரத் பொன்சேகா நடவடிக்கை யெடுத்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது.

அது அவ்வாறேயிருப்பின் விடயங்களைச் சுட்டிக்காட்டி தெளிவான சாட்சியங்கள் மற்றும் [illegible] யில் கைது செய்வதற்கு அரசாங கத்திற்கு முடியுமாயிருந்தது. இது ஒரு பொறுப்புமிக்க அரசாங்கம் அல்லது ஒரு சனாதிபதி, உண்மையான மக்கள் ஆணை யைப் பெற்றுள்ளதாகக் கூறுகின்ற ஒரு அரசாங்கம் செயலாற்ற வேண்டிய விதத்தில் செயலாற்ற வில்லை. நடு இரவில் பலவந் தமாக வீட்டுச் சோதனைக்கான ஒரு நீதிமன்ற ஆணையொன்று அல்லது கைது செய்யும் கட்டளையின்றி இராணுவ உத்தியோகத்தர் சிலர் வந்து ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவரைப் பலவந்தமாகக் கடத்திச் செல்வதாகவே இது உள்ளது. இது அனைத்து சனநாயக மரபுகளையும் முறிப்பதாகும். அரசாங்கம் சனாதிபதித் தேர்தல் காலத்தில் இடி அமீன், ஹிட்லர் பற்றிய திரைப்படங்களைக் காட்டி, எதிர்க்கட்சி வெற்றி பெற்றால் சர்வாதிகாரம் உருவாகும் என மேற்கொண்ட பிரசாரத்தின் உண்மையான தோற்றப்பாடு தற்போது வெளிப்பட்டுள்ளது. ஐக்கிய சோசலிசக் கட்சி கடந்த காலம் பூராவும் சுதந்திரத்தின் மேடையுடன் சேர்ந்து உருவாகி வருகின்ற சர்வாதிகாரத்தின் ஆபத்தை தோலுரித்துக்காட்டி செய்வதற்கு நிபந்தனைகளின்றிப் போராடியது.

அரசாங்கம் சேவையை உயர்க்கி. [illegible] ஊடகர் தமது சேவைக்குள்ளேயே உள்ளனர் என்பதைக் காட்டியுள்ளது. இந்நிலைமையினுள் அரசியல் கட்சிகள் அனைத்து பொதுசன அமைப்புகளுடனும் சேர்ந்து தொழிற்சங்க இயக்கம், சுதந்திரம் மற்றும் சனநாயகத்தை வென் றெடுக்கின்ற தற்கால போராட்டத் தில் முன்னணி வகித்தல் வேண்டும். தொழிலாளர் வர்க்கத் தின் அனைத்து உரிமை களையும் பறித்தெடுப்பதற்கும், வேலை நிறுத்தங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முறித்துவிடுவதற்கும் அரசாங்கம் அடுத்த சுற்றில் செயற்படும்.

அந்நிலைமையைப் புரிந்து கொண்டு சனநாயகம் பாரதூர மான ஆபத்துக்கு முகம் கொடுத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு வீதியில் இறங்கியுள்ள அனைத்து சக்திகளுடனும் ஒன்று சேர்ந்து போராட்ட ரீதியான தொழிற்சங்க இயக்கத்திற்கான விரிவானதொரு முன்னணியொன்றை கட்டியெழுப் புதல் வேண்டும் என்பதை 'செந்தாரகை' வலியுறுத்து கின்றது.

## டக்ளஸ் இரண்டும்கெட்ட நிலையில்

மஹிந்தவின் அரசாங்கத்திற்கு பக்கபலமாக நீண்ட காலம் செயற்பட்டு வந்த ஒரேயொரு தமிழ் தலைவரான டக்ளஸ் தேவானந்த அரசியல் நெருக்கடியொன்றுக்கு முகம் கொடுத்துள்ளார். 2009 ஆம் ஆண்டு வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது சுதந்திர முன்னணியின் ஊடாகப் போட்டியிடுமாறு ஈ.பீ.டீ.பி. அங்கத்தவர்களுக்கு சனாதிபதி கட்டளையிட்டார். யாழ்ப்பாண நகர சபையை ஓரளவு வெற்றி கொள்ள முடியுமாயிருந்த போதிலும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் பொதுவாக வடக்கு மக்களிட மிருந்து கிடைத்த பிரதிபலிப்பு ஈ.பீ.டீ.பி. க்கு மிகவும் பாதக மானதாக இருந்தது. யாழ்ப்பாண நகர சபைத் தேர்தலின் பின்னர் அவர் ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டமை தாம் மேற்கொண்ட ஒரு தவறான தீர்மானமாகும் எனக் கூறினார்.

கடந்த சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளின் மூலம் வடக்கின் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத துடன் தாம் இல்லையென்பதை மீண்டு மொருமுறை உறுதி செய்துள்ளனர். இந்த பெறுபேறுகளுடன் ஈ.பீ.டீ.பீ. யின் கீழ்மட்ட அங்கத்தவர்கள் தொடர்ந்தும் ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் சேர்ந்து போட்டியிடக் கூடாதென்ற கருத்தை வன்மையாக முன் வைக்க முற்பட்டுள்ளனர். இந்த நிலைமையினுள் நீண்ட காலம் (மலையகத்தில் தொண்ட மனைப் போன்று) தெற்கின் ஆளுங்கட்சி யுடன் சேர்ந்து அமைச்சர் பதவிகளை ஏற்று செயலாற்றி வந்த டக்ளஸ் தேவானந்தவுக்கு தமது அரசியல் தலைவிதி யைத் தீர்மானிக்க நேரிட்டுள்ளது. அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்கெனில் அரசாங்கத் துடன் சேர்ந்து செயலாற்ற வேண்டும் என்பதோடு, வடக்கின் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோடு இருப்பதற்கெனில் அரசாங்கத் திலிருந்து நீங்க வேண்டும் என்ற இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கு மிக அண்மையிலேயே டக்ளஸுக்கு நேரிடும்.

## தொண்டமான் மற்றும் மலையக முன்னணி அரசியல் நெருக்கடியில்

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இருந்துகொண்டு அதன் பங்காளராக இருந்து போட்டியிடுவதா இல்லாவிடின் வேறு ஒரு வழிமுறையைக் கடைப்பிடிப்பதா என்பதைப் பற்றித் தீர்மானிப்பதற்கு முடியாமல் இந்த இரண்டு கட்சிகளிலும் நெருக்கடி நிலையொன்று உருவாகியுள் ளதாக அறிய வந்துள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் வாக்குத் தளம் மலையக மக்கள் மத்தியில் துரிதமாக வீழ்ச்சியடைந்து வந்தது. சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளும் பொதுவாக தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர் என்பதையே எடுத்துக்காட்டுவதாகவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களிலிருந்து உருவாகிய ரூபா 500/ சம்பள அதிகரிப்புக்கான கோரிக்கையை மஹிந்த ராஜபக்ஷ அரசாங கத்தின் தேவையின் பிரகாரம் காட்டிக் கொடுத்தமையையிட்டு தோட்டத் தொழிலாளர்கள் தொண்டமான் மற்றும் காலஞ் சென்ற சந்திரசேகரன் ஆகிய தலைவர்களை நேரடியாகவே குற்றம்சாட்டுகின்றனர். இந்தத் தலைவர்கள் முதலாளித்துவ அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளை ஏற்று தோட்டத் தொழிலாளர்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை என தோட்டத் தொழிலாளர்கள் வெளிப் படையாகவே கூறுகின்ற தொரு நிலைமை உருவாகியுள ளது. இந்தச் சூழலில் தொடர்ந்தும் ஸ்ரீ.ல.சு. கட்சி மற்றும் ஐ.தே.க. ஆகிய முதலாளித்துவக் கட்சிகளுக்கு துணைபோக வேண்டாமென தோட்டத் தொழிலாளர்கள் காங்கிரஸிடமும் மலையக முன்னணியின் தலைவர்களிடமும் வேண்டிக்கொள்கின்றனர்.

மலையக தோட்டத் தொழிலாளர் களின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தேசிய உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரேயொரு வழி ஐக்கிய சோசலிசக் கட்சியுடன் சேர்ந்து செயலாற்று வதாகும் என ஐக்கிய சோசலிசக் கட்சியின் நுவரெலியா அமைப் பாளர் தோழர் பெருமாள் ராமகிருஷ்ணன் கடந்ததொரு தினத்தில் ஹட்டனில் நடைபெற்ற ஐக்கிய சோசலிசக் கட்சியின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## ஊழியர் வேட்டையாடுதலை நிறுத்து

சனாதிபதித் தேர்தலின் பெறுபேறு கள் வெளியிடப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களிலும் கடுமையான விதத்தில் ஊழியர்களை வேட்டையாடுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதற்கு மத்தியில் லேக் ஹவுஸ், வானொலி, தொலைக்காட்சி, இபோச, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரம், துறைமுகம் ஆகிய இடங்களில் பழிவாங்கல்கள் மிக அநாகரீகமான தோற்றப்பாட்டை எடுத்துள்ளது. ஆளுங்கட்சியின் வேட்பாளருக்கு எதிராகச் செயலாற்றிய மற்றும் செயலாற றியதாக ஆட்சியாளர்கள் கருதுகின்ற ஊழியர்கள் தான்தோன்றித்தனமாக பல்வேறு பிரதேசங்களுக் கும் இடமாற்றப் பட்டுள்ளனர். ஒருசில ஊழியர்கள் வேலையி லிருந்து நீக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டு உள்ளனர்.

இராணுவம் மற்றும் பொலிசினுள் தற்போது பகிரங்கமாக நடைபெறு கின்ற இந்த வேட்டையாடுதலுக்கு மேலதிகமாக புகையிரதம், அஞ்சல் சேவை, ஆசிரிய சேவை, அரசாங்க அச்சகம் உள்ளிட்ட பல நிறுவனங்களில் பழிவாங் கல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னுமே முடிவடையாதுள்ள மேற்படி ஊழியர்களை வேட்டை யாடுவதற்கு எதிராக கட்சி, நிறம், சங்கம் என்ற வேறுபாடுகளைக் கவனியாது ஒன்றுதிரளுமாறு சுதந்திர தொழிற்சங்க மத்திய நிலையம் தொழிலாளர் வர்க்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

## ஊடக அடக்குமுறை புதியதொரு சுற்றில்

மஹிந்த ராஜபக்ஷவின் புதிய ஆட்சியின் கீழ் ஊடக அடக்குமுறை புதியதொரு சுற்றில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. லங்கா ஈநியூஸின் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போயுள்ளமையும், லங்கா பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த கைது செய்யப் பட்டுள்ளமை மற்றும் லங்கா பத்திரிகைக்கு முத்திரையிட்டுள்ளமையும் வெளியே காணக்கூடிய தாயுள்ள சம்பவங்களாகும். இதைத் தவிர பிரதேச ஊடகவியலாளர்கள் பலரும் கடந்த இரண்டு வாரங்களில் பிரதேச அரசியல்வாதிகளால் தாக்கப்பட்டுள்ளமையும் இதே போக்கின் ஒரு பகுதியாகும். சுதந்திர ஊடகத்தின் நிலைத்திருத் தலுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் காட்டுகின்ற அளவுகடந்த பயம், மீண்டும் மீண்டும் செயற்படுத்தப்படுகின்ற ஊடக அடக்குமுறையின் ஊடாக பிரதிபலிக்கின்றது. தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற ஊடக அடக்குமுறையை நிறுத்துவதற்கு அனைத்துச் சக்திகளும் ஒன்றுதிரள வேண்டும் என கடந்த காலம் பூராவும் 'செந்தாரகை' கூறிவந்தது.

எந்தவொரு ஊடகமும் உரிய விதத்தில் தகவல் களை அறிக்கையிடுவதற்கு முன்வராதிருந் தமையினாலேயே சனாதிபதித் தேர்தல் தொடர்பாக பல்வேறு தகவல்களும் வதந்திகளைப் போன்று பரவிச் சென்றது. தமக்குக் கிடைக்கின்ற தகவல்களைக்கூட அறிக்கையிட வேண்டாம் என ஊடகவியலாளர்கள் மறைமுகமாக நிர்ப்பந்திக் கப்பட்டிருந்தனர். அரசாங்கத்திற்கு எதிராக எழுதுகின்ற, கூறுகின்ற ஊடகவியலாளர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்ற இந்நடைமுறைக்கு எதிராக அணிதிரளுமாறு ஐக்கிய சோசலிசக் கட்சி அனைத்து இனப் பிரிவினருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றது.

සිරිතුංග ජයසූරිය වන මා විසින් 53/6, ඩී.ඩී. දාබරේ මාවත, නාරාහේන්පිට පිහිටි රෝයල් මුද්‍රණාලයෙහි මුද්‍රණය කරන ලදී.

படிப்பகம்

www.padippakam.com



# 2010 சனாதிபதித் தேர்தலின் உள்வாரியான தகவல்கள்

கடந்த தினங்களில் நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளை நம்பமுடியாததொரு சூழ்நிலை நாட்டினுள் உருவாகியுள்ளது. இதற்குச் சமமான விதத்தில் 2009 ஜுன் 12 ஆம் திகதி நடைபெற்ற ஈரானின் தேர்தல் பெறுபேறுகளையும் நிராகரித்து இலட்சக்கணக்கான மக்கள் வீதியிலிறங்கிப் போராட்டம் நடத்தினர். ஈரானின் சனாதிபதித் தேர்தலில் நடைபெற்ற பாரதூரமான தேர்தல் மோசடிகள் மற்றும் 2010 இந்நாட்டு சனாதிபதித் தேர்தல் மோசடிகள் எவ்வளவு தூரத்துக்கு சமமானவையாக உள்ளன என்பதைக் கூற முடியாமலிருப்பினும் இந்த இரண்டு சனாதிபதித் தேர்தல்களும் ஒப்பீட்டளவில் ஒரே விதத்திலான அரசியல் சூழ்நிலையிலேயே நடைபெற்றதென்பது தெளிவாகின்றது.

ஈரான் சனாதிபதி மஹ்மூத் அஹமட்நெஜாட் மற்றும் இலங்கையின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் சனாதிபதிப் பதவியில் இருக்கையில் இரண்டாவது தடவை ஆட்சியை வேண்டி நின்றமை விசேடமாகும். ராஜபக்ஷ மற்றும் அஹமட்நெஜாட் ஆகிய இருவரும் தீவிர தேசப்பற்றுள்ளவர்களாகத் தம்மை அடையாளப்படுத்தினார்கள் என்பதோடு, தாய்நாட்டின் சுதந்திரத்திற்காகத் தோற்றுபவர்களாகக் காட்டிக் கொண்டார்கள். இரண்டு பேரினதும் வெளிநாட்டுக் கொள்கை அநேகமாகச் சமமானதாக உள்ளதோடு, மேலைத்தேய சக்திகளைச் சூழ்ச்சிகாரர்கள் எனக் குறிப்பிட்டு, அவர்கள் தமது தேசப்பற்றுள்ள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக நித்தமும் குற்றம்சாட்டி, நாட்டு மக்களுக்கு மத்தியில் அனுதாபத்தைத் தேடுவதற்கு முயற்சித்தனர். அதேபோன்று இரண்டு பேரும் மதுபானம் அருந்தாதவர்களென அறிவித்துள்ளார்கள் என்பதோடு, தீவிர மதப் போக்குடையவர்களாகவும் பிரபல்யமடைந்துள்ளனர். ஈரான் மத அடிப்படைவாத ஆட்சியின் ஊடாக அனைத்து சனநாயக உரிமைகளையும் இரத்துச் செய்து கடும் சர்வாதிகார ஆட்சியை நடத்துவதாக உலகம் பூராவும் அவமதிப்புக்குள்ளாகியுள்ள ஒரு நாடாகும். இலங்கையில் ராஜபக்ஷ ஆட்சியானது ஊடகவியலாளர்களைக் கொலை செய்து, ஊடக நிறுவனங்களைத் தீயிட்டுக் கொழுத்தி, தொழிற்சங்கப் போராட்டங்களை சீர்குலைத்து, தமிழ் மக்களுடைய உரிமைகளை மீறி, சர்வாதிகாரப் பாதையில் சென்றுகொண்டுள்ள ஒரு நாடென்ற வகையில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. ஈரான் மற்றும் இலங்கையின் சனாதிபதித் தேர்தல்கள் இரண்டும் மோசடியானதென பலத்த மக்கள் கருத்தொன்று உருவாகியுள்ளமை இந்த இரண்டு சனாதிபதிகளினதும் ஆட்சிக்கு மத்தியில் நிலவுகின்ற விசேடமானதொரு சமமான தன்மையாகும்.

# மோசடியானதொரு சனாதிபதித் தேர்தல்

பொதுவாக எந்தவொரு வாக்கெடுப்பின் பின்னரும் தோல்வியடைந்தவர்கள் வாக்கெடுப்பின் மோசடியைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகளையும் சுமத்துவார்கள் என்ற போதிலும் இத்தடவை **சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை ஒட்டுமொத்**தமாக நிராகரிக்கின்ற நிலைமையொன்று நாட்டினுள் உருவாகியுள்ளமை விசேடமாகும். தேர்தல்கள் ஆணையாளரால் இடைக்கிடை வெளியிடப்படுகின்ற கூற்றுகள் ஒன்றுக்கொன்று முரணான தன்மையைக் கொண்டுள்ளமை மக்களுக்கு மத்தியில் தோன்றியுள்ள நம்பிக்கையின்மையையும் சந்தேகத்தையும் மேலும் வலுப்படுத்தக் காரணமாயமைந்துள்ளது. சனாதிபதித் தேர்தலின் இறுதிப் பெறுபேறுகளைத் தயாரிக்கின்ற போது கணிப் பதிவுகளில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற முறைகேடுகள் எவ்வாறாயிருப்பினும் பெயர் நியமனத் தேதியிலிருந்து வாக்கெடுப்பு நடைபெற்ற தினம் வரை பல கட்டங்களின் கீழ் பாரதூரமான தேர்தல் மோசடிகள் நடைபெற்றுள்ளமைக்குப் போதியளவு சான்றுகள் உள்ளன.

பெயர் நியமனத் தேதியிலிருந்து கூட்டுத்தாபனங்கள், சபைகள் உள்ளடங்கலாக அனைத்து அரச நிறுவனங்களும் ராஜபக்ஷவின் வெற்றிக்காக வெளிப்படையாகவே செயலாற்றின. அமைச்சுக்களின் அனைத்து வளங்களும் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அலரி மாளிகையில் நாள்தோறும் ஆயிரக்கணக்கானோருக்கு இரவு பகலாக இலவசமாக **உணவு பானங்கள் வழங்கப்பட்டு உபசரிக்கப்பட்டன.** அரசியலில் ஈடுபடுதல் சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்கள், அமைச்சுச் செயலாளர்கள், பொலீஸ் மற்றும் இராணுவத்திலுள்ள உயர் உத்தியோகத்தர்கள், தேர்தல் ஆணையாளரின் கட்டளையை மதிக்காது மஹிந்தவுக்குச் சார்பாக பகிரங்கமாகத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டனர். மஹிந்த பங்குபற்றுகின்ற தேர்தல் கூட்டங்களுக்கு மக்களை அழைத்து வருவதற்காக நூற்றுக் கணக்கான இபோச பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இலங்கை வானொலியும் தொலைக்காட்சியும் அனைத்து விதமான ஊடக ஒழுக்கவியலகளையும் தூக்கியெறிந்துவிட்டு, மஹிந்த ராஜபக்ஷவை சிங்கள தேசப்பற்றுள்ளவராக ஆக்குவதற்கும், எதிர் தரப்பினரை தேசத் துரோகிகளாக ஆக்குவதற்குமான விசேட நிகழ்ச்சிகளை பிரசாரம் செய்தன. தேர்தல் சட்டங்களை மீறி அரசாங்கம் பணத்தையும் அரச சொத்துக்களையும் ராஜபக்ஷவின் வெற்றிக்காக பயன்படுத்தியதென்பதை உறுதி செய்வதற்கு இதனடிப்படையில் போதியளவு சான்றுகள் உள்ளன.

தேர்தல் தினத்தில் நடைபெற்ற வன்முறைப் பிரயோகம் மற்றும் பலாத்காரம் பற்றிய தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. **குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் குண்டுத்** தாக்குதல் நடத்தப்பட்டு வாக்களிக்க வந்திருந்த மக்கள் அச்சுறுத்தித் துரத்தப்பட்டனர். வடக்கில் எல்லா இடத்திலும் இராணுவம் 24 மணி நேரமும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் தேர்தல் தினத்தில் நடைபெற்ற இக்குண்டுத் தாக்குதல்கள் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டவை என்பதை மூடி மறைக்க முடியாது. இதைத் தவிர வடக்கின் இடம்பெயர் முகாம்களில் உள்ள மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன. தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக வேறேதேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆளடையாளத்தை சமர்ப்பிப்பதன் மூலம் வாக்களிக்கக் கூடிய சட்ட ரீதியான இயலுமை இருக்கும் போது, அவ்வாறு செய்ய முடியாதெனப் பிரசாரம் செய்தும், அன்றைய தினம் பி.ப. 2.00 மணிவரை வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்காதும் வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பதற்கு இராணுவமும் அரச அதிகாரிகளும் செயற்பட்டனர். 40 கிலோ மீற்றர்களுக்கும் அதிக தூரத்தைக் கடந்து இவர்கள் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தந்திருந்த போதிலும் தாம் **வாக்களிக்க வேண்டிய வாக்களிப்பு நிலையத்தைக்** தேடிக் கண்டுபிடித்து வாக்களிப்பதற்குப் போதியளவு நேரம் இவர்களுக்கு இருக்கவில்லை. அரசாங்கம் தமக்குச் சார்பான இராணுவ உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி இவ்வாறு வடக்கு மக்களின் வாக்களிக்கும் உரிமையை பறித்ததென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இரத்தினபுரி பிரதான வாக்கெண்ணும் நிலையத்திற்கு பக்கத்தில் செல்லுபடியற்றதாத ஆக்கப்பட்ட ஒருதொகை வாக்குச் சீட்டுகள் கிடைத்துள்ளதெனவும் அவை தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகாவின் பிரதிநிதிகள் அண்மையில் வெளிப்படுத்தினர். இதைத் தவிர மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை ஆகிய பிரதேசங்களில் வாக்குச் சீட்டுக்குச் சமமான மாதிரி வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப் பட்டுள்ளதாகவும், அந்த வாக்குச் சீட்டுகளில் ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளர் தோழர் சிறிதுங்க ஜயசூரியவினதும் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவினதும் தேர்தல் சின்னங்கள் திரிபுபடுத்தப்பட்டதாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.சோ.க. தலைமையகத்திற்கு அறியவந்துள்ளது. (இதனுடன் **தொடர்புடைய வாக்குச் சீட்டின் படம் இங்கே தரப்பட்டுள்ளது**). அரசாங்கத்துடன் தொடர்புடைய பிரதேச தலைவர்கள் திட்டமிட்டு மேற்படி சீர்குலைக்கும் செயலை மேற்கொண்டுள்ளதன் மூலம் சிறிதுங்க ஜயசூரியவுக்கும் சரத் பொன்சேகாவுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது. மொகமட் காசிம் எனப்படுகின்ற வேட்பாளரின் முன்னே ஐக்கிய சோசலிசக் கட்சியின் தேர்தல் சின்னமான முச்சக்கர வண்டியை அச்சிட்டு விநியோகித்துள்ளதன் மூலம் ஐ.சோ.கட்சிக்கு கிடைக்கவேண்டிய ஒருதொகை வாக்குகள் இழக்கப்பட்டுள்ளதென்பதையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். சனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும், நியாயமானதுமான ஒரு தேர்தலாக இருக்கவில்லை எனவும் பெறுபேறுகளை நம்பக் கூடாது எனவும் உருவாகியுள்ள மக்கள் கருத்தை மேற்படி காரணங்களால் மூடிமறைக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com


# பெறுபேறின் அரசியல் வெளிப்பாடு

அதிகரித்த வாழ்க்கைச் சுமை, தொழிலின்மை, மோசடி, ஊடக அடக்குமுறை, உறவினர் உபசரிப்பு மற்றும் பொருளாதார வீழ்ச்சி ஆகிய விடயங்களின் அடிப்படையில் அரசாங்க எதிர்ப்பு நாடு முழுவதிலும் உருவாகி வந்த போதிலும் யுத்தத்தின் வெற்றியின் ஊடாக மஹிந்த ராஜபக்ஷ தெற்கின் சிங்கள மக்களின் பெரும்பான்மையினர் மத்தியில் வீரனாக மாறியுள்ள காரணியை மறைக்க முடியவில்லை. தெற்கின் சிங்கள தேசியத்துவத்தின் எழுச்சி மற்றும் அது தொடர்ந்தும் நிலவுகின்றமையை மீண்டும் நாம் குறைவாக மதிப்பிட்டோம். உண்மையிலேயே இந்த சனாதிபதித் தேர்தலில் யுத்தத்தின் உண்மையான வீரன் யார் என்பதைத் தீர்மானிக்கின்ற முடி சூட்டுதலே நடைபெற்றது. இதில் பொன்சேகா ஒரு துரோகியாக ஆக்கப்பட்டு மஹிந்த யுத்தத்தின் வீரனாக முடி சூடினார். சனாதிபதித் தேர்தலில் மோசடிமிக்க மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கின்ற தீவிர தேவையைக் கொண்டிருந்தவர்கள் உலகளாவிய முதலாளித்துவ வேலைத்திட்டத்திற்காக தோற்றிய ஓய்வு பெற்ற ஜெனரல் பொன்சேகாவுக்கு வாக்களிக்க முற்பட்டதன் காரணமாக சுயாதீனமானதொரு இடதுசாரி வேலைத் திட்டத்திற்காக நாம் முன்னெடுத்துச் சென்ற குரல் ஓரளவுக்கு மூடிமறைக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2005 சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை விட 2010 சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் மஹிந்த ராஜபக்ஷ மீண்டுமொருமுறை சிங்கள மக்களுக்கு மட்டும் சனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதையே எடுத்துக்காட்டு கின்றன. இதையிட்டு மஹிந்த உண்மை யிலேயே வெட்கப்படுதல் வேண்டும். தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் வாழும் வடக்கிலும், கிழக்கிலும், மத்திய மலையகத்திலும், கொழும்பு நகரத்திலும் மஹிந்த ராஜபக்ஷ படுதோல்வியடைந்தார். (பெறுபேறுகளைப் பார்க்கவும்)

இவ்வாறானதொரு பெறுபேறின் மூலம் வடக்கு, கிழக்கு, மலையகத்திலும் மற்றும் கொழும்பு நகரத்தில் வாழ்கின்ற தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள், அவர்களுக்கு தெரிவு செய்வதற்கு ஒன்றுமே இல்லாதிருந்த நிலைமையை நோக்கி தள்ளப்பட்டார்கள் என்பது விசேடமாகும். ராஜபக்ஷ மற்றும் பொன்சேகா ஆகிய இருவரும் ஒன்றாக இருந்து யுத்தத்திற்குத் தலைமை வழங்கியவர்களாவர். உண்மையிலேயே இந்த இருவர் பேரிலும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரே விதத்தில் குரோதம் நிலவுகின்றது. ஆயினும் தமிழ் மக்களுடைய மனங்களில் நிலவுகின்ற ஆழமான வேதனையை மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராகத் தெரிவிக்கின்ற ஒரு ஊடகமாக, விருப்பமின்றியேனும் பொன்சேகாவைத் தெரிவு செய்வதற்கு பெரும்பாலான தமிழ் மக்கள் தீர்மானித்தனர். 30 வருடங்கள் நிலவிய யுத்தமானது, 62 வருடகால வெற்றியளிக்காத முதலாளித்துவ ஆட்சி முறையின் நிச்சயமானதொரு விளைவாகும் எனவும், முதலாளித்துவ முறையின் ஊடாக தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாதெனவும், வடக்கு மற்றும் தெற்கின் முதலாளித்துவ மல்லாத வகுப்பினர் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புகின்ற சோசலிச ஆட்சியொன்றின் மூலம் முதலாளித்துவ முறையை தோல்வியுறச் செய்வதால் மட்டுமே தேசிய பிரச்சினையைத் தீர்க்கலாம் எனவும் ஐக்கிய சோசலிசக் கட்சி சனாதிபதித் தேர்தலின் போது முன்னெடுத்துச் சென்ற கருத்தியலை தமிழ் மக்களுக்கு மத்தியில் உறுதி செய்வதற்கு போதியவு கால அவகாசம் இல்லாதிருந்தமை உண்மையிலேயே வருந்தத்தக்கதொரு விடயமாகும். இந்த அனைத்து நிலைமைகளுக்கு மத்தியிலும் ஐக்கிய சோசலிசக் கட்சி வடக்கு, கிழக்கு மற்றும் மலை நாட்டில் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கதாகும் என்பதை கூறுதல் வேண்டும்.

வடக்கில் வாழ்கின்ற மக்களில் அநேகமானோர் மேற்படி சனாதிபதித் தேர்தலை தமது தேர்தலாகக் கருதவில்லை என்பதை எமது கட்சி தேர்தல் காலத்தில் சமர்ப்பித்த அறிக்கைகளில் குறிப்பிட்டோம். எமது அந்த முடிவுகளின் துல்லியத் தன்மை வடக்கில் வாக்களிக்கப்பட்டுள்ள விதத்தினை ஆராய்கின்போது தெளிவாகின்றது.

இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களில் பெருந்தொகையானோர் வெளிநாடு களுக்குச் சென்றுள்ளதால் அல்லது மேலும் பெருந்தொகையானோர் யுத்தினால் இறந்துள்ளமையின் காரணமாக வாக்காளர் பெயர் பட்டியல் உண்மையிலேயே வசிப்பவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாயுள்ளதென்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்

### சரதபொன்சேகா வெற்றியீட்டிய மாவட்டங்கள்

| | யாழ் | % | வன்னி | % | மட்டு | % | திருமலை | % | திகாமடுல | % | நுவரெலிய | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சரத்பொன்சேகா | 113877 | 63.8% | 70367 | 66.8% | 146057 | 68.9% | 87661 | 54.0% | 153105 | 49.9% | 180604 | 52.1% |
| மஹிந்த ராஜபக்ஸ | 44154 | 24.7% | 28740 | 27.3% | 55663 | 26.2% | 69725 | 43.0% | 146912 | 47.9% | 151604 | 43.7% |
| மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகள் | 185132 | 25.6% | 107680 | 40.3% | 216287 | 64.6% | 164504 | 68.2% | 309474 | 73.5% | 352844 | 77.1% |

| தேர்தல் தொகுதி அளிக்கப்பட்ட வாக்குகளின் | சதவீதம |
|---|---|
| யாழ்ப்பாணம் | 19.18% |
| கிளிநொச்சி | 7.23% |
| முல்லைத்தீவு | 14.00% |
| மன்னார் | 34.19% |
| வவுனியா | 43.83% |

### மஹிந்த ராஜபக்ஸ வெற்றியீட்டிய மாவட்டங்கள்

| மாவட்டம் | காலி | % | மாத்தறை | % | ஹம்பாந்தோட்டை | % | குருணாகலை | % | புத்தளம் | % | அனுராதபுரம் | % | பொலன்றுவ | % | பதுளை | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஸ | 386971 | 63.6% | 296155 | 65.5% | 226887 | 67.2% | 582784 | 63.0% | 201981 | 58.7% | 298448 | 16.3% | 144889 | 64.9% | 237579 | 53.2% |
| சரத பொன்சேகா | 211633 | 34.8% | 148510 | 32.8% | 105336 | 31.2% | 3227594 | 35.4% | 136233 | 39.5% | 143761 | 31.0% | 75026 | 33.6% | 198835 | 44.5% |
| மொத்தவாக்குகள் | 611386 | 80.2% | 454954 | 78.6% | 339782 | 80.6% | 930537 | 78.6% | 346909 | 70.0% | 453823 | 78.3% | 224647 | 80.1% | 452377 | 78.7% |

## *100வது வருட மகளிர் தினம்*



(கிளேரா செட்கின்)

*இவ்வருடம் நாம் 100வது வருட மகளிர் தினத்தை கொண்டாடுகிறோம். 1910 மார்ச் 8 ஆம் திகதி கோபன்ஹேகன் நகரில் நடைபெற்ற முதலாவது மகளிர் தினத்தின் சம்மேளனத்தின் சோசலிச அரசியல் நிறைவேற்று உறுப்பினர் (கிளேரா செட்கின்) சகோதரியினால் கொண்டுவரப்பட்ட ஆலோசனையில் ஒவ்வொரு வருடமும் மார்ச் 8 ஆம் திகதி உலக மகளிர் தினத்தை கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. இதற்கான காரணம் 1859 மார்ச் 8 ஆம் திகதி அமெரிக்கா நியூயோர்க் நகரில் ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்கள் தமது உரிமைக்காக வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர். தொழிற்சாலை உரிமையாளர்கள் எம்மை கொன்று வேலையை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குறைந்த நேர வேலை வேலைக்கேற்ற ஊதியம், மற்றும் வாக்குரிமை கேட்டு அன்று 15,000 ற்கு மேற்பட்ட பெண் தொழில்கள் ஊர்வலத்தை நடத்தினார்கள் எனவே மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினம் மட்டும் அல்ல பெண்களின் போராட்டத் தினமாகவும் கொள்ளப் பட்டது.*



*நடைபெற்ற போராட்டங்கள் பெண்கனொருவர் கட்டுக் கொல்லப்பட்டார். 1917 மார்ச் 8 ஆம் திகதி ரஸ்ய பெண் தொழிலாளர்கள் சார் ஆட்சி முறைக்கு எதிராகவும் இரண்டாவது ஊர்வலத்தை ஆரம்பித்தார்கள். இதனை மேலும் மேலும் வளர்ச்சிபெற லெனின் தோழர் 1919 ஆம் ஆண்டு மகளிர் தினத்தை ரஸ்யாவில் விடுமுறை தினமாக பிரகடனம் செய்தார்.*

එක්සත් සමාජවාදී පක්ෂය
ஐக்கிய சோசலிச கட்சி
UNITED SOCIALIST PARTY

ஐக்கிய சோசலிச இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக நீங்களும் சேருங்கள். நீங்கள் எங்களோடு தொடர்புகொள்வதற்கு அல்லது கலந்துரையாடுவதற்கு விரும்பினால் இக்கூப்பனை நிரப்பி அனுப்புங்கள்

பெயர் ..............................
வயது ..............................
முகவரி ..............................
..............................
தொழில் ..............................

*SENTHARAHAI*
No. 53/6, E.D. Dhabare Mawatha, Narahenpita, Colombo - 05.
Tel: 011 4510289 Fax: 011 2504647

படிப்பகம்

www.padippakam.com



# பெறுபேறின் உள்வாரியான நிலை

அரச அதிகாரத்திற்கும் வன்முறைக்கும் மத்தியில் மிகவும் மோசடியானதொரு செயற்பாட்டின் ஊடாக சனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. மேற்படி தேர்தல் பெறுபேறுகளில்கூட சிங்கள பேரினத்தின் தேவை பெருக்கெடுத்தோடியது என்பது தென்படக்கூடிய பிரதானமான பண்பாக உள்ளது. ஒரு கலைஞராகப் பிரசித்தி பெற்றுள்ள ஜக்சன் அந்தனி போன்றோர் தேர்தல் பெறுபேறுகளின் பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யின் ஈழ வரைபடத்திற்கும் சரத் பொன்சேகா வெற்றிபெற்ற மாவட்டங்களின் வரைபடத்திற்கும் இடையே வித்தியாசம் எதுவுமில்லையென வெட்கமின்றித் தெரிவித்தார். மஹிந்த ராஜபக்ஷ பெற்ற அறுபது இலட்சம் வாக்குகளில் பெரும் எண்ணிக்கை ஜக்சன் அந்தனி மற்றும் விமல் வீரவன்ச போன்ற இனவாதப் பைத்தியகாரர்களின் மேற்படி கருத்துகளுடன் ஒத்துப்போகின்றன. தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வினை வழங்குதலின்பால் செய்லுதல் நாட்டைப் பிரிப்பதாகும் என்ற முடிபுக்கு சிங்கள பெரும்பாலானோரை இட்டுச் சென்றுள்ளதென்பதே இதன் கருதுகோளாக உள்ளது. மார்ச்/ ஏப்பிறலில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு. கட்சி முதற்கொண்ட கூட்டமைப்பிலிருந்து மேற்படி பிற்போக்குக் கருத்தைக் கொண்ட இனவாதிகளே பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர் என்பதைக் கூறவேண்டியதில்லை. இந்நிலைமையினுள் ராஜபக்ஷ ஆட்சியின் இரண்டாவது அத்தியாயத்திலும் தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வொன்று கிடைக்கலாம் என, மோசடிப் பேர்வழிகளாலும், மடையர்களாலும் மட்டுமே நினைக்க முடியுமாயிருக்கும். இச் சூழலில், தேசிய பிரச்சினையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குகின்ற ராஜபக்ஷ ஆட்சி தமிழ் மக்களை பிரிந்து செல்கின்ற திசையின் பக்கமே மீண்டும் தள்ளிவிடும்.

திரிபுபடுத்தப்பட்ட தேர்தல் பெறுபேறுகளில்கூட சோசலிச வேலைத் திட்டமொன்றுக்காக போராடி ஐக்கிய சோசலிசக் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை வர்க்கப் போராட்டத்தின் எதிர்கால வளர்ச்சி தொடர்பில் முக்கியமானதாகும். 2005 சனாதிபதித் தேர்தலையும் 2010 சனாதிபதித் தேர்தலையும் எளிமையான விதத்தில் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. 2005 சனாதிபதித் தேர்தலை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றுசேர்ந்து இனவாதத் தூண்டுதலுக்காகப் பயன்படுத்தியதோடு 2010 சனாதிபதித் தேர்தல் யுத்தத்தின் வெற்றியைக் கொண்டாடிய சிங்கள பௌத்த ஆதிக்கவாதம் முடிசூடுவதை அடையாளப்படுத்த நடத்தப்பட்ட ஒரு தேர்தலாகும். சிங்கள இனவாதம் சிம்மாசனமேறி அதன் சூடு தணிவதற்கு முன்னர் உரிய காலத்தை விட இரண்டு வருடங்கள் முன்னதாக மஹிந்த சனாதிபதித் தேர்தலை நடத்தியது இதன் காரணத்தினாலாகும் என்பதை மறக்கக் கூடாது. 2010 சனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளை மேற்படி சூழமைவிலிருந்தே நோக்குதல் வேண்டும். இனவாதம் பெருக்கெடுத்தோடிய மேற்படி சூழலில் ஐக்கிய சோசலிசக் கட்சி 2005 சனாதிபதித் தேர்தலில் பெற்ற 35642 வாக்குகளை விட 2010 இல் ஐக்கிய சோசலிசக் கட்சி பெற்ற 8352 வாக்குகள் தர ரீதியில் வேறு பெறுமதியொன்றைக் கொண்டுள்ளது. இடதுசாரி வேட்பாளர்களாகத் தோற்றிய ஏனைய அனைவரையும் தாண்டிச் சென்று வாக்குகளைப் பெறுவதற்கு ஐக்கிய சோசலிசக் கட்சிக்கு இயலுமாயிருந்தமை இங்கு வலியுறுத்தப்படுதல் வேண்டும். குறிப்பாக புதிய இடதுசாரி முன்னணி ஐக்கிய சோசலிசக் கட்சியிலிருந்து காலத்திற்குக் காலம் தப்பிச் சென்ற பிரிவினரை வரவேற்று (ஐக்கிய சோசலிசக் கட்சியிலிருந்து தப்பிச் சென்ற சந்தர்ப்பவாதிகள் ஐக்கிய சோசலிசக் கட்சியில் சொற்ப அளவிலேனும் அரசியல் போராட்டத்தை நடத்தியவர்களல்ல) இடதுசாரிகளின் பொது வேட்பாளராக வேடம் தரித்து நடத்திய பாரிய கூப்பாடுகளைக் கவனத்திற் கொள்ளாது ஐக்கிய சோசலிசக் கட்சிக்கு இடதுசாரி மக்களின் முன்னுரிமை கிடைத்துள்ளமை மிக முக்கியமானதாகும்.

பாசிச பாணியில் வளர்ச்சியடைந்து வருகின்ற மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக தொழிலாளர் வகுப்பை முதன்மையாகக் கொண்டு சிறு பான்மையினர் மற்றும் அனைத்து பாதிக்கப்பட்ட மக்களுடன் கலைஞர்கள், அறிஞர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து சனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மாற்றுச் சக்தியொன்றைக் கட்டியெழுப்புவதில் தலையிடுதலே இடதுசாரிகளின் முன்னேயுள்ள உண்மையான சவாலாகும். இந்நடவடிக்கையின் பொருட்டு மிக சிக்கலானதும் சிரமமானதுமான வழியில் செல்ல வேண்டி நேரிடும். இது தேர்தல் அரசியலிலிருந்து நீங்கியதான சுதந்திர சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான வேலைத் திட்டமொன்றுக்காக திறந்த கருத்தியல் ரீதியிலான அரங்கமொன்றின் ஊடாக கட்டியெழுப்பப்படுதல் வேண்டும்.


சிறிதுங்க ஜயசூரிய

| | கண்டி | | மாத்தளை | | கொழும்பு | |
|---|---|---|---|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 406636 | 54.1% | 157953 | 59.7% | 614740 | 52.9% |
| சரத்பொன்சேகா | 329492 | 43.8% | 100513 | 38.0% | 533022 | 45.9% |
| மொ.வாக்குகள் | 759486 | 78.2% | 267085 | 77.9% | 1172776 | 77.0% |

| | கம்பஹா | % | களுத்துறை | % | மொனறாகலை | % |
|---|---|---|---|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 718716 | 61.1% | 412562 | 63.0% | 158435 | 69.0% |
| சரத்பொன்சேகா | 434506 | 37.2% | 231807 | 35.4% | 66803 | 29.1% |
| மொ.வாக்குகள் | 1174608 | 79.6% | 658790 | 81.0% | 231856 | 77.1% |

| | புத்தளம் | % | இரத்தினபுரி | % |
|---|---|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 201981 | 58.7% | 377734 | 63.7% |
| சரத்பொன்சேகா | 136233 | 39.5% | 203566 | 34.3% |
| மொ.வாக்குகள் | 346999 | 70.0% | 596856 | 81.2% |

## சரத் பொன்சேகா மற்றும் சிறிதுங்க ஜயசூரிய ஆகிய இருவரினதும் தேர்தல் சின்னங்கள் மாற்றப்பட்டு அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட போலி வாக்குச் சீட்டுகள்


சனாதிபதித் தேர்தல் / PRESIDENTIAL ELECTION
மாதிரி வாக்குச்சீட்டு / Specimen Ballot Paper

Idroos Mohomad Ilyas
Sarath Manamendra
Vickramabahu Karunaratna
Upali Sarath Kongahage
Channa Janaka Sugathsiri Gamage
சிறிதுங்க ஜயசூரிய
Sirithunga Jayasuriya
Wije Dias
Muthu Bandara Theminimulla
Senaratna de Silva
Aruna de Zoysa
Sanath Pinnaduwa
Lal Perera
Mohomad Cassim Mohomad Ismail
சரத் பொன்சேக்கா
Sarath Fonseka
Mohamed Musthaffa
W. V. Mahiman Ranjith
Mahinda Rajapaksha
Panagoda Don Prince Soloman Anura Liyanage
Ukkubanda Wijekoon
M. K. Sivajilingam
Battaramulle Seelarathana Thero
Achala Ashoka Suraweera

படிப்பகம்